முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு நூற்பாலை இருக்கிறது. அதனால் இது இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 10, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

10—

தும்மலப்பட்டி பெரிய ஓடைத் திட்டம்.

*9757—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு யூனியன், தும்மலப்பட்டி அருகில் உள்ள பெரிய ஓடைத் திட்டம் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தும்மலப்பட்டி பெரிய ஓடையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) சில தொழில் நுட்பக் குறைபாடுகளைக் களையும் பொருட்டு தல அதிகாரிகளுக்கு அந்தத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. குறைகளைக் களைந்து இறுதியாக்கம் செய்து நில நிர்வாக ஆணையரின் ஒத்திசைவைப் பெற்றதற்குப் பின்னால் அந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைப் பகுதியைப் போன்ற வறண்ட பகுதிகளிலே மழைக்காலத்திலேயாவது வீணாகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்று நானும் என் தொகுதி மக்களும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது இதிலே காலதாமதம் செய்யாமல், இது ஒரு சிறிய திட்டம்

1993 அக்டோபர் 26]

தான், கடந்த பத்தாண்டு காலமாக இந்தச் சிறிய திட்டம் மேலே போகிறது, கீழே வருகிறது என்ற நிலைமை இருந்து கொண்டிருப்பதை மாற்றி, சற்று துரித நடவடிக்கை எடுத்து விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், களவாய்ப்பட்டி கிராமம், தும்மலப்பட்டி அருகே பெரிய ஓடையின் குறுக்கே கண்மாய் கட்டப்படுகின்ற திட்டத்திற்கு ரூ. 38.40 இலட்சம் மதிப் பீடாகத் தயாரித்திருக்கிறது. இதற்கு ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு கிடைக்கவில்லை. அந்த ஒத்திசைவைப் பெறுவதற்காக மீண்டும் தல அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே தெரிவித்தது தப் போல மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு கிடைத்த தற்குப் பின்னாலே நில நிர்வாக ஆணையரின் ஒத்திசைவும் பெறப்பட்டு, அதன் பின்னால் அரசுக்கு வரும்போது அது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு 38.40 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து விரைவிலே அவருடைய ஒத்திசைவை அனுப்பி வைப்பதற்கு நாங்களும் நடவடிக்கை எடுக்கிறோம். இதுபோன்று மலைப் பகுதிகளிலே எங்கெங்கே எல்லாம் இருக்கிறதோ அங்கே எல்லாம் பெய்யக்கூடிய மழைத் தண்ணீரை தேக்கி வைக்க வேண்டும். இல்லை என்றால் எங்கெங்கேயோ சென்று ஏழை விவசாயிகளு டைய நிலத்திலே மணல் அடித்து அந்த நிலத்தை மூடிவிடுகிறது. அப்படிப்பட்ட இடங்களை மாநிலம் முழுவதும் சர்வே செய்து, அதன் மூலமாக மழைத் தண்ணீர் வீணாவதைத் தடுக்க, சின்னச் சின்ன 'செக்-டேம்' அதாவது சிறிய சிறிய குட்டைகள் அமைக்கும் திட்டத்தை தயார்செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஏற்கெனவே பொதுப்பணித் துறையில் தலைமைப்பொறி யாளர் (மைனர் இரிகேஷன்) என்பவர் இருக்கிறார். இது போன்ற சிறிய கண்மாய்களை அமைப்பதற்கு பல்வேறு

ஆய்வுகளைச் செய்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் '2 ஸ்கீம்' என்று சொல்லப்படுகிற பகுதி-2 திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுத்து, எங்கே எந்த அளவுக்குத் தண்ணீரை தேக்கமுடியும் என்பதை ஆராய்ந்து, சிறு கண்மாய்களையும் குளங்களையும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுபோன்று எந்த எந்தப் பகுதிகளிலே இருக்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்ததை, எந்த அளவுக்குத் தண்ணீரைத் தேக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவித்தால், அரசு அதுபற்றி பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 11, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

11—

பொது மக்கள் பயனுக்காக ஒதுக்கப்படும் மனைகளை வீட்டு மனைகளாக பயன்படுத்துவதை தடுத்தல்.

*9975—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தை வீட்டுமனைப் பிரிவுகளாகப் பிரித்து விற்பதற்காக அனுமதி அளிக்கும் போது, பொது மக்கள் பயனுக்காக ஒதுக்கப்படும் இடத்தையும் வீட்டுமனையாகவே பயன்படுத்தப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொதுவாக, பொது மக்கள் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களை வீட்டுமனைகளாகப் பயன்படுத்த அரசு அனுமதி அளிப்பது கிடையாது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது பயன்களுக்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களில் கட்டப்படும் வீடுகளுககு மின்னிணைப்பு, குடிநீர் குழாய்